ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

14.08.2025

1. ஞானத்தலைவனே கந்தவேலா
ஞானிகள் படை கொண்டநல்
ஞானபண்டிதா ஆறுமுகக் கடவுளே
ஞாலமதில் உன்பதம் பற்றி வருபவர் எல்லாம்

2. எல்லோரும் என்போல் ஞானியாக
இனிதே சரவண சோதி கலப்பரென
வல்லமைபட உன் பெருமை கூறி
வழங்குவேன் அரங்க ஞானி யானும்

3. யானும் விசுவாவசு ஆண்டு நள்ளிதிங்கள்
வரமென பஞ்சகுருவார அருளாசி
ஞானம்பெற மக்களுக்கு உரைப்பேன்
ஞானிகளாக உலகமக்கள் தேறவே

4. தேறவே பிரணவக் குடில் படைத்து
தினந்தோறும் ஞானிகள் பூசை
சரவண சோதி ஏற்றி அருளிவர
சகலவரும் அரங்கனென் பூசை

5. பூசை கலந்து வணங்கி வர
புண்ணியம் செய்யும் மனபலம்
ஆசைபட நிரம்பி கலியினில்
அடுத்தவர் பசி பிணி அகற்றும்

6. அகற்றும் உள் ஞானம் கிளம்பி
அனுதினமும் தருமம் செய்கின்ற
மகத்துவமும் மகா சக்தியும் கிட்டும்
மனத்தெளிவு திடம் ஞானபலம் கூடி

7. கூடியே அரங்கன் செய்யும்
குறைவிலா அன்னதானம் வழி
நாடியே பொருளுதவி செய்து
ஞானிகள் ஆசி அனுகூலம் கண்டு

8. கண்டுமே தன்னை உயர்த்தி
கலியினில் மற்றவர்கள் தனையும்
தொண்டுவழி தருமவழி தேற்றி
தேசிகனென் துணைபட வாழ்வர்

9. வாழ்வினில் அன்னதானமோடு
வளம்பெற ஞானிகள் பேரில்
தாழ்விலா பூசை செய்பவர்கள்
தன்னுடன் தன் குடி தேற்றி

10. தேற்றியே தொடரும் சேவையால்
தேசத்தையே இந்த சமூகத்தையே
ஆற்றல்மிக்க ஆறுமுகப் பெருமான்
அரங்கஞானி என் வழி மாற்றி

11. மாற்றியே ஞானத் தலைமையை
மக்களை காக்கும் ஞானஆட்சியை
ஆற்றல்பட தந்துமே சிறப்பர்
அரங்கமகான் யானருளிய குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி